# கவிஞர் இளம்பிறை கவிதைகளில் கடல் வருணனை

*த. சித்ரா*
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
எஸ்.வி.இ.டி கல்லூரி, கௌரிவாக்கம், சென்னை

மலர்: 11
சிறப்பிதழ்: 2
மாதம்: ஜூலை
வருடம்: 2023
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6462

### முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு இந்தியவரலாற்றின் இன்றியமையாக் காலக் கட்டடம் என்று கூறினால், அது மிகையாகா. அத்தகைய காலக் கட்டத்தில் உரிமைக்காக இணைந்து போராடலும் உரிமைப் பெற்ற பின்னும் ஒற்றுமையாக இருந்து செயல்படலும் இந்நூற்றாண்டின் புதுப்பொலிவு. மொழிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டுவளர்ச்சியடையதுடிக்கும்காலம். உலக இலக்கியங்களோடு தத்தம் இலக்கியங்களை ஒப்புநோக்கி உயர்வை படைக்க ஊக்கம் கொள்ளும் பொற்காலம் இது. தளர் நடையிட்டுக் கொண்டிருந்த தண்டமிழ்க் கவிதை பாரதிக்குபின் எழுச்சிப் பெற்றது. ஏற்ற முற்றுப் பீடுநடை போடத் தொடங்கியுள்ளது. மரபுவழியான போக்கும் புதுக் கவிதை வகையிலான நோக்கும் கலந்த இச்சூழல் கவிதை என்பது இலக்கியத்திற்கு ஒரு திருப்பு முனை எனலாம்.

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பதற்கு ஏற்ப இன்றைய புதுக் கவிதைகள் மக்களின் வாழ்க்கையையும் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் வகையில் காணப்படுகிறது. அந்த வகையில் கவனத்தில் பதிகின்ற கருப்பொருள் அறப் பார்வை எதார்த்தமான அங்கதம் வற்றாத வார்த்தை வளம் கதிரொளியில் மின்னுகின்ற அழகியல் எளிமையான மொழிநடை இவை அனைத்தும் தேவைக்கேற்ப தலைநிமிர்ந்து நிற்கின்ற தமிழின் வடிவமே இளம்பிறையின் கவிதைகள். கவிதையில் இப்படியான போக்கு அமைவது மிகவும் அரிதானது. பலருக்கு அமையப் பெறாதது என்றும் கருதலாம். கவிஞர் இளம்பிறை அவர்களின் கடற்கரை என்னும் கவிதையில் கடலின் வெளிப்பாடும் அதோடு தன்னுடைய துன்ப நிலையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

### நெய்தல் திணை

அன்பின் ஐந்திணையாகிய முல்லை, குறிஞ்சி. மருதம். நெய்தல். பாலை என்று கூறுவர். அவற்றுள், கடலும் கடல் சார்ந்த நிலத்துக்குரிய பொழுதினை இரண்டு வகையாகப் பிரிப்பர். ஒன்று பெரும்பொழுது மற்றொன்று சிறுபொழுது. பெரும்பொழுது ஓர் ஆண்டின் அடிப் படையில் ஒரு பொழுதுக்கு இரண்டு மாதங்கள் என்ற

கணக்கில் கார் காலம் குளிர் காலம் முன்பனிக் காலம் பின்பனிக் காலம் இளவேனில் முதுவேனில் என்று வகுத்தனர். சி றுபொழுது என்பது ஒரு நாளைக் கொண்டு கணக்கிட்டனர் இந்நிலத்துக்குச் சிறுபொழுது ஏற்பாடு இது இரண்டு மணி முதல் ஆறு மணி வரை கொண்ட நேரம். இதனை முதற்பொருள் என்று கூறுவர்.

## நெய்தலுக்குரியஉரிப்பொருள்

நெய்தல் நிலத்துக்குரிய உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும். தலைவன் பிரிந்து சென்ற காலத்தில் தலைவி, அவனை நினைத்து இரங்கல். மீனவர்கள் கடலுக்குச் செல்கையில் அப்போது, அவர்களுடைய மனைவியர் எந்த ஒரு பாதிப்பும் நிகழாமல் கரைசேர வேண்டும் என்று எண்ணி இரங்கப்படுதலே நெய்தலுக்குரிய பொழுதும் உரிப்பொருளும் இதனைக் குறித்துத் தொல்காப்பியம் கூறுவதை,

**வைகுறுவிடியன் மருதம் எற்பாடு**
**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்**
***(அகத்.நூ.8)***

மேலும்

***புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங் காலைத் திணைக்குரியபொருளே***
***(தொல்.பொரு.அகத்.நூ.14)***

என்னும் நூற்பா எடுத்துரைப்பதைக் காணலாம்.

## சங்கப்பாடலும் இளம்பிறையும்

தலைவி தன்னுடைய ஆற்றாமையைக் கடலின் மேல் ஏற்றிக் கூறும் மரபு பற்றிய பாடல் இது. அவரவர் உறுபிணி தம் போல் சேர்த்தியும் (தொல். பொரு.நூ.20) கூறப்படும் பக்கச் சொல்லாக இப்பாடல் விளக்கப்பெறும். இதனை

***பாராணங்குற்றணை-கடலே!புழியர்***
***சிறுதலைவெள்ளைத் தோடுபரந்தன்ன***
***மீனார் குருகின் கானல்அம் பெருந்துறை***
***வெண்வீத் தாழைதிரையலை***
***நன்னென் கங்குலும் கேட்கும் நின்குரலே!***
***(குறுந்.பா.163)***

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

புழி நாட்டாரது சிறிய தலையையுடைய வெள்யாட்டின் தொகுதி, பரந்து காணப்படுவது போலக் கடற்கரைச் சோலையில் மீனை உண்ணுகின்ற நாரைகளின் தொகுதி காணப் படும். அச்சோலை சூழ்ந்த பெரிய நீர்த் துறையில் வெண்ணிறப் புக்களையுடைய தாழைகளை அலைகளைப் போல் மோதி வருந்துகின்ற நின் குரல் இருள் செறிந்த கங்குல் பொழுதினும் கேட்கின்றது. கடலே! நீயாரால் வருத்த முற்றனை.

***கடற்கரைஅழகில் தினம்தினம் நடப்பேன்***
***காலத்தின் துன்பநினைவுகள் கடப்பேன்***
***அலைக்கரம் புரட்டும் ஆழ்கடல் படிப்பேன்***
***அடைமதியின் விளிம்பில் கண்ணீர் வடிப்பேன்***
***திளைப்பேன்***
***(அவ.கா.பக்.64 65)***

என்னும் கவிதை புலப்படுத்துகிறது.

தினம்தோறும் கடற்கரையின் அழகில் நடந்து செல்வேன். காலத்தினால், ஏற்படுகின்ற துன்பமும் தன்னுடைய துன்பமும் கடந்து செல்வேன் இருந்தாலும், எப்படி ஆழ்கடலில் இருந்து கடலலை புரண்டு வருகிறதோ அது போல, என் துன்பமும் வரும். அத்துன்ப நிலையில் அமைதியாக இருக்கும் போது, கண்ணீர் வடிப்பேன். அக்கண்ணீரோடு மணல் தரையில் அமர்ந்து மனதில் உள்ள நினைவுகளை வரைவேன். அது கடலலையால், கலைத்திடும் போது, என் நினைவுகளும் கலையும். அந்தக் கடலையோடு என் மனதில் இருக்கின்ற துன்பத்தைக் கலைப்பேன். என் வாழ்க்கை இனி இனிதாக அமையும் என்னுள் கற்பனையில் மகிழ்வேன்.

குறுந்தொகையில் தலைவி தன்னுடைய ஆற்றாமையைக் கடலின் மேல் ஏற்றிக் கூறுவதாக, அமைந்துள்ளது போல, இளம்பிறை அவர்கள் தன்னுடைய துன்பநிலையைக் கடலையோடு ஒப்பிட்டுக் கூறப்படுவதைக் காணமுடிகிறது.

**திரையிமிழ் இன்னிசை அனைஇ அயலது**
**முழவுமிழ் இன்னிசைமறுகுதொறு இசைக்கும்**
**தொண்டிஅன்னபனைத் தோள்**
**ஒண்தொடி அரிவை என் நெஞ்சே**
**கொண்டோளே**

**(ஐங்.பா.171)**

என்னும் பாடல் எடுத்தியம்புவதை அறியலாம்.

என் நெஞ்சத்தை முழுமையாகக் கவர்ந்து கொண்ட இவள் கடலலையின் இனிய இசையோடு கூடி அயலே உள்ள ஒவ்வொரு தெருக் கண்ணும் மத்தளத்தின் இனிய இசை முழுங்குதற்கு இடமான தொண்டி என்ற பட்டினம் போன்ற பருத்த தோள்களையும் ஒலி மிக்க வளையல்களையும் உடையவளாவாள்.

**ஆசையில் கொஞ்சம் என்னை நனைப்பேன்**
**அப்பொழுதெல்லாம் உன்னை நினைப்பேன்**
**வலையினில் மீனாய் துடியாய்த் துடிப்பேன்**
**வங்கக் கடலின் மடியில் கிடப்பேன்**

**(அவ.கா.ப.65)**

என வரும் கவிதைப் புலப்படுத்துகிறது.

தலைவனுடைய நெஞ்சத்தை எப்படித் தலைவி கவர்ந்து கொண்டாளோ, அது போல, கடலலையன் மீது தன்னுடைய துன்பத்தை ஒப்பிட்டுக் கூறியுள்ளார் இளம்பிறை.

கடலலைப் பார்த்தால், யாருக்கும் ஆசை வரும் அந்த அலையில் தன்னை நினைக்க வேண்டும். அவ்வாறு, நிகழும் போது கடல் அலையில் சிக்கிக் கொண்டால். எப்படி வலையில் மீன் மாட்டிக் கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளதுமாய் தவிக்கிறதோ, அதைப 'போல, மனதில் ஏற்பட்ட துன்பம் துடித்துக் கொண்டு இருக்கும். அப்போது, வங்கக் கடலின் மடியில் கிடப்பேன் என்று கூறியுள்ளார்.

ஐங்குறுநூற்றில் தலைவனுடைய நெஞ்சை எப்படி தலைவி கவர்ந்து கொண்டாளோ அது போல, இளம்பிறை அவர்கள் தன்னுடைய துன்பத்தை கடல் அலையோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

**கடற்கரையின் அழகு**

கடற்கரைக்குப் பலர் நடந்து செல்வர் அவர்களின் நடைகளைப் பார்ப்பேன். என்னை மனநிறைவுடன் மகிழ்ச்சியாகக் கண்டுகளித்து இருப்போரைக் காண்பேன் காற்று வீசும் போது கரையை நோக்கிப் பறப்பேன் என்னைப் பார்ப்பவர் கவிதை எனும் மாளிகைச் சாளரம் திறப்பேன். மழை பெய்கின்றபொழுது கடலுடன் நானும் சேர்ந்து நனைவேன். மேளன மொழியில் தத்துவம் பயில்வேன். பெருமழையைக் குடிக்கின்ற மணல்வெளியாக ஆவேன். பேசிடும் அலைகளின் பேருரைக் கேட்பேன்.

வெயில் காலத்தில் என்னைச் சுட்டு எரித்தாலும் நான் வற்றுவது இல்லை. மனிதர்க்கு துன்பம் நேரிடும் போது அதனைக் கண்டு துவண்டு போகாமல் எதிர்த்து நடுக்க முற்றால் வந்த துன்பம் போவதும் இல்லை.

கடலில் எந்தத் திசைகளில் காற்று வீசுகிறதோ அதே திசையில் கடலின் அலை செல்லும். முறாக வீசுவது இல்லை. இது தான் இயற்கை. நமக்கு ஏற்படுகின்ற அவதூறல்களும் அப்படித்தான் வருகின்றன. நமக்கு அவை வேண்டாம் என்று நினைத்தாலும் விடுவது இல்லை. எனவே, அவற்றை எல்லாம் எதிர்கொள்ளும் மன பக்குவம் வேண்டும்.

காற்று திசைமாறி வீசினாலும் அல்லது ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றாலும் கடல் தன்னுடைய இடத்தை விட்டு மாறுபடுவதில்லை. காற்று மாறுபடும் போததான் கடலலைகள் அவற்றிற்கு ஏற்ப மாறுபடுகின்றது. ஆகையால், காற்று மாறுபட்ட திசைகளில் வீசினாலும் நிலையாக இருப்பது கடலே. அக்கடலில் காற்று வீசுகின்றபோது ஈர அலைகளில் மனம் சிலிர்ப்பேன். மனதில் எது தோன்றுகிறதோ அதற்குக் காலமும் தூரமும் (தொலைவும்) இல்லை. அத்தகைய குணத்தை உடையது கடல் என்று இளம்பிறை அவர்கள் ஏற்படுகின்ற அவதூறல்களை கடலோடும் காற்றோடும் ஒப்பிட்டுக் கூற முற்பட்டுள்ளார்.

சங்க இலக்கியங்களில் நெய்தல் பற்றிக் கூறும் பாடல்கள் கடலும் கடல் சார்ந்த பகுதியைக் கூறுகிறது. கடலின் தன்மை அவற்றில் வாழும் உயிரினங்கள் ஆகியவற்றோடு னிதனுடைய இன்பம் மற்றும் துன்ப நிகழ்வுகளைப் பற்றி விளக்கும் நோக்கில் காணப்படுகிறது. இளம்பிறை அவர்களும் அவ்வாறே தன்னுடைய கவிதையில் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் எனலாம்.

## முடிவுரை

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த பகுதிகளாகக் கொண்டு இன்று காறும் இலங்குகின்றது. கடலில் வாழுகின்ற உயிரினங்கள். இயற்கைகள் ஆகியவற்றோடு தன்னுடைய நிகழ்வுகளை அப்பொருளின் மேல் ஏற்றிக் கூறுவதாகச் சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை நிகழ்த்திக் கொண்டு இருக்கின்றது. அந்த வகையில் நம் வாழ்வில் ஏற்படுகின்ற ஒருசில அவதூறல்களை கடலோடம் காற்றோடும் இணைத்துக் கூறுவதாகக் கடற்கரை என்னும் கவிதை தலைப்பு உணர்த்துகிறது என்பதை அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம் (பொருள்) நச்சினார்க்கினியர் உரை அகத்திணையியல் புறத் திணையியல் திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் திருநெல்வேலி சென்னை-1 முதற்பதிப்பு -1947
2. குறுந்தொகை - உ.வே.சாமிநாதையர் உ.வே.சா.நூல்நிலையம் 2 அருண்டேல் கடற்கரைச் சாலைபெசன்ட் நகர் சென்னை-600090 பதிப்பு-2009
3. நற்றிணை (மூலமும் உரையும்) - பரம சிவம் த.கோ தமிழ்ப் பல்கலைக்கழகம் பதிப்பு தஞ்சாவுர்
4. அவதூறுகளின் காலம் - இளம்பிறை டிஸ்கவரி புக்பேலஸ் கே.கேநகர் மேற்கு சென்னை-600078